**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன் – மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகங்களில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது – செலவினம் ரூ.76,57,136/– நிதி ஒப்பளிப்பு – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (நிலை) எண்.90** **நாள்: 26.12.2014**

**ஜய–மார்கழி 11, திருவள்ளுவர் ஆண்டு, 2045**

**படிக்கவும்:**

1. மாண்புமிகு அமைச்சர் (சந(ம)சஉதி) அவர்களின் அறிவிப்பு, நாள் 15.07.2014.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடிதம் ந.க.எண்.400/சிப/2013, நாள் 28.08.2014 மற்றும் நாள் 10.09.2014.

–––

**ஆணை:**

2014–15 ஆம் நிதியாண்டு, மாற்றுத் திறனாளிகள் நலத்துறை மானியக் கோரிக்கையின் போது, ஏனைவற்றுடன் மாண்புமிகு அமைச்சர் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம் அவர்கள், கீழ்க்கண்ட அறிவிப்பு செய்தார்கள்:–

> **“மாற்றுத் திறனாளிகள் நலத்துறையின் கீழ் 32 மாவட்டங்களில் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. மற்ற துறைகளில் உள்ளது போல் மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகங்கள், ஒன்றியம் தோறும் செயல்படுவதில்லை. எனவே மாற்றுத் திறனாளிகளின் நலனை கருத்தில் கொண்டு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அவ்வப்போது அறிவிக்கும் நலத்திட்டங்கள் மாற்றுத் திறனாளிகளை உடனடியாக சென்று சேரும் வகையிலும், தகவல்கள் பரிமாற்றம் செய்து கொள்ளவும், கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், 32 மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகங்களும் ரூ.76.58 இலட்சம் செலவினத்தில் உள் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தித்தரப்படும்.’’.**

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள், மேற்படி அறிவிப்பினை செயல்படுத்தும்விதமாக, ஒவ்வொரு மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகத்திற்கும் Directorate General of Supplies & Disposal (DGSD) விலையில், ஒரு கணினி மற்றும் UPS, ஒரு மடிக்கணினி, ஒரு பிரிண்டர், ஒரு ஜெராக்ஸ் இயந்திரம் மற்றும் ஒரு நிகரி இயந்திரம் (Fax machine) ஆகியவை தேவைப்படுவதாகவும், மேலும் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரகத்திற்கும் கணினி, மடிக்கணினி, பிரிண்டர், ஜெராக்ஸ் இயந்திரம் மற்றும் நிகரி இயந்திரம் தேவைப்படுவதாகவும், எனவே, 32 மாவட்டங்களுக்கும் ரூ.68,79,744/– மற்றும் மாநில ஆணையரகத்திற்கென ரூ.7,77,392/– ஆக மொத்தம் ரூ.76,57,136/– உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வழங்குமாறு அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. மேற்படி, மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டம்) அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை பரிசீலித்த அரசு, அதனை ஏற்று, 32 மாவட்டங்களில் உள்ள ஒவ்வொரு மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல

**[த.பி.பா]**

அலுவலகத்திற்கும், Directorate General of Supplies & Disposal (DGSD) விலையில், ஒரு கணினி மற்றும் UPS, ஒரு மடிக்கணினி, ஒரு பிரிண்டர், ஒரு ஜெராக்ஸ் இயந்திரம் மற்றும் ஒரு நிகரி இயந்திரம் (Fax machine) வாங்க ரூ.68,79,744/– மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரகத்திற்கு கணினி, மடிக்கணினி, பிரிண்டர், ஜெராக்ஸ் இயந்திரம் மற்றும் நிகரி இயந்திரம் வாங்க ரூ.7,77,392/– ஆக மொத்தம் ரூ.76,57,136/– (ரூபாய் எழுபத்தாறு இலட்சத்து ஐம்பத்தேழாயிரத்து நூற்று முப்பத்தாறு மட்டும்), இவ்வாணையின் இணைப்பில் கண்டுள்ளவாறு, நிதி ஒப்பளிப்பு செய்தும், இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி மூன்றில் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

**2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02 – சமூக நலன் – 001–நெறிப்படுத்தலும் நிருவாகமும் – I-திட்டத்தில் சேராதது – AF-மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரகம் – 76–கணினியும் துணைப் பாகங்களும் – 01–வாங்குதல். ( த.தொ.கு 2235 -02-001-AF-7619)**

5. மேலே பத்தி–3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு “புது துணைப்பணி” குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்ப்பார்த்து, இச்செலவினம், முதற்கண் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணமாக பெற்று செலவிடப்பட வேண்டும். இதற்கான ஆணைகள் நிதித் (வரவு செலவு பொது–I) துறையால் தனியே வெளியிடப்படும். எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணத்தைப் பெற தேவையான விண்ணப்பத்தை வரையறுக்கப்பட்ட படிவத்தில் இவ்வரசாணை நகலுடன் நிதித் (வரவு–செலவு பொது–I) துறைக்கு அனுப்பிவைக்குமாறு, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை சட்டமன்றப் பேரவையின் சிறப்பு கவனத்திற்கு கொண்டு வரும் பொருட்டு, 2015–16 ஆம் ஆண்டு துணை மானியக் கோரிக்கையில் சேர்ப்பதற்குரிய கருத்துருவினை உரிய தருணத்தில் தக்க விளக்கக் குறிப்புடன் இவ்வரசாணையின் நகலுடன் நிதித் (சந) / (வ.செ.பொ–I) துறைக்கு அனுப்பி வைக்குமாறும், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. இவ்வரசாணை, நிதித் துறையின் இசைவுடன், அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.69890/நிதி(சந)/2014, நாள் 19.12.2014–ன்படி, கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1851 (ஆயிரத்து எண்ணூற்று ஐம்பத்தொன்று) கீழ் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ. சிவசங்கரன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
மாநில கணக்காயர், சென்னை -18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை -35
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள்.
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை – 78 வழியாக)
**நகல்:**
முதலமைச்சரின் முதன்மைச் செயலர், சென்னை–9
சிறப்பு நேர்முக உதவியாளர், அமைச்சர் (சந (ம) சஉதி) அலுவலகம், சென்னை–9.
நிதித்(சந) துறை, சென்னை–9
நிதித் (வரவு செலவு பொது–1) / (வ.செ.பொ.II) துறை, சென்னை–9
இருப்பு தணிக்கை அலுவலர், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.

**அரசாணை (1D) எண்.90, மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை, நாள் 26.12.2014ன்**

**இணைப்பு**

| வ. எண் | தேவைப்படும் இயந்திரம் | இயந்திரத்தின் விவரக் குறிப்பு (Specification) | தோராய விலை | தேவைப்படும் எண்ணிக்கை | மொத்த தொகை |
|---|---|---|---|---|---|
| **OFFICE OF THE DISTRICT DIFFERENTLY ABLED WELFARE OFFICER** | | | | | |
| 1. | Desktop | vostro 460-T2212171NS | Rs. 40,000 | 32 | Rs. 12,80,000/- |
| 2. | Fax | | Rs.16,300 | 32 | Rs. 5,21,600/- |
| 3. | Laptop | i5- (4 GB Ram, 500 GB HD) | Rs. 48,592 | 32 | Rs. 15,54,944/- |
| 4 | UPS | 1000 VA | Rs. 7,300 | 32 | Rs. 2,33,600/- |
| 5 | Printer | Laser Printer - P1108 (Monochorme) | Rs. 7,000 | 32 | RS. 2,24,000/- |
| 6. | Scanner | Scan jet 200 (2400 Dpi | Rs. 5,000 | 32 | Rs. 1,60,000/- |
| 7 | Copier | | Rs. 90,800 | 32 | Rs.29,05,600/- |
| | | **Total** | | | **Rs. 68,79,744/-** |
| **OFFICE OF THE STATE COMMISSIONER FOR THE DIFFERENTLY ABLED** | | | | | |
| 1. | Desktop | vostro 460-T2212171NS | Rs. 40,000 | 10 | Rs. 4,00,000/- |
| 2 | Printer | Laser Printer - P1108 (Monochorme) | Rs. 7,000 | 20 | Rs. 1,40,000/- |
| 3. | Scanner | Scan jet 200 (2400 Dpi) | Rs. 5,000 | 5 | Rs. 25,000/- |
| 4 | UPS | 1000 VA | Rs. 7,300 | 10 | Rs. 73,000/- |
| 5 | Copier | | Rs. 90,800 | 1 | Rs 90,800/- |
| 6 | Laptop | i5 (4 GB Ram, 500 GB HD) | Rs. 48,592 | 1 | Rs. 48,592/- |
| | | **Total** | | | **Rs. 7,77,392/-** |
| | | **Grand Total** | | | **Rs.76,57,136/-** |

பொ.சிவசங்கரன்
அரசு முதன்மைச் செயலாளர்

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்.